IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.123/2015
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜானகிராமன் | Caste | : | |
| Father Name | : | தனுஷ்கோடி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. எனது சொந்த ஊர் சேனூர் ஆகும். பிரதிவாதி அதே ஊரைச் சேர்ந்தவர்கள் தான். 18.10.2013 அன்று பிரதிவாதியுடன் கிரைய உடன்படிக்கை நான் ஏற்படுத்திக் கொண்டோம் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வாதுரையிலும் இவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் உரையைப் பற்றி எனக்கு தெரியவில்லை. பதிலுரையில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியவில்லை. பதிலுரையில் என்னிடம் அவருக்கு பணம் தேவைபட்டதால் சொத்தை அடமானம் வைத்து கொண்டு பணம் கொடுங்கல் என்று பிரதிவாதி என்னிடம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை கிரைய ஒப்பந்தம் தான் போட்டார்.

2. நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதி படிக்கவில்லை என்று சொன்னால் ஓரளவு படித்துள்ளார் என்று நினைக்கிறேன். நான் சொல்வது போல் படித்ததவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால் அவரை ஏமாற்றி அடமானப் பத்திர்த்தை கிரைய ஆவணமாக மாற்றி நான் பொய்யாக ஒரு ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

18.10.2013 அன்று கிரைய தொகை 90,000/- பேசி முன் பணமாக ரூபாய் 80,000/- கொடுத்தேன். 36 மாதத்திற்குள் நான் மீதி தொகையான 10,000/- ஐ கொடுத்து நான் கிரையம் செய்து கொள்வேன் என்று அவரிடம் சொன்னேன். அதாவது குறிப்பாக 3 வருட கால தவணைக்குள் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்கிறேன் என்று சொன்னேன்.

3. 3 வருட காலத் தவணைக்குள் மீதி பணமான ரூபாய் 10,000/-ஐ பிரதிவாதி என்னிடம் பலமுறை ரூபாய் 10,000/-ஐ கொடுக்குமாறு கேட்டார் என்றால் சரியல்ல. நான்தான் 10,000/-ஐ வாங்கி கொண்டு கிரையம் செய்து கொடுங்கள் என்று மூன்று முறை பிரதிவாதியிடம் கேட்டேன். 2015 ல் வழக்கு தாக்கல் செய்த பிறகு 10,000/- நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்யும் போது என் தரப்பு ஆவணமாக ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன் மேற்படி ரூபாய் 10,000/-வைப்பீடு செய்ததை ஆவணமாக குறியீடு செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்ப ஆவணம் குறியீடு செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

4. மேற்படி ரூபாய் 10,000/- வைப்பீடு செய்ததற்கு முறையாக மனு அளித்து அனுமதி அளித்ததின் பேரில் நான் வைப்பீடு செய்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். அவ்வாறு நான் அளிக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி என்னிடம் பலமுறை வந்து பணத்தை கேட்டுள்ள நிலையில் நான் அந்த 10,000/-ஐ கொடுத்து என்னுடைய Ready and Willingness ஐ பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் நான் பணம் கொடுப்பதற்க ரெடியாக இருந்தேன் ஆனால் அவர் தான் வரவில்லை.

5. 05.06.2015 அன்று வழக்கறிஞர் நோட்டீஸ் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் நோட்டீஸ் கொடுத்தவுடனே வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் நான் 3 வருட காலம் காத்திருக்க வேண்டிய கால அவகாசம் இல்லை என்றாலும் அதனால் அங்கு எனது தயார் நிலையை காட்டுகிறது என்று சொன்னால் சரியல்ல. அடமானம் போட்டதால் தான் பிரதிவாதி மாதம் 2,400/- எனக்கு செலுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2,400/- அடமான வட்டிக்காக வாங்கியது அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பின் நான் பஞ்சாயத்து பேசி பிரதிவாதியிடம் ரூபாய் 1,00,000/- பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் பிரதிவாதியை மூன்று முறை சந்தித்து ரூபாய் 10,000/-ஐ வாங்கி கொள்ளுங்கள் என்று நான் குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு ஆவணமோ, சாட்சியமோ கொடுத்துள்ளேன் என்றால இல்லை. நான் இவ்வாறு தாக்கல் செய்துள்ள நிலையில் நான் குறிப்பிட்டுள்ளது சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தயாராக இருந்தேன் என்பதற்கு எனது வங்கி கணக்கின் வைப்பு தொகையோ, அல்லது வேறு ஆவணத்தையோ தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அடமானம் தான் என்னிடம் ஏற்படுத்தினார் என்றாலும் அதனால் தான் மாதம் ரூபாய் 2,400/- வட்டி கொடுத்தார் என்றாலும் நான் கிரைய ஒப்பந்தம் என்று குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது வழக்கு மூலம் இல்லை என்று வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த வழக்கை கிரைய ஒப்பந்தம் என்று எடுத்துக் கொண்டால் கூட குறித்த வகை நிவாரண சட்டத்தின் கீழ் கால நிர்ணயம்

உண்டு என்பதையும் ஆனால் அதை நான் பின்பற்றாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 3 வருட கால தவணை என்று குறிப்பிட்டுள்ள நிலையில் தேதியிட்டு இந்த தேதிக்குள் என்று குறிப்பிடாத நிலையில் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் அடமானம் தான் போட வந்தார் என்றாலும் படிப்பறிவு இல்லாத காரணத்தால் அவரை ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி ரூபாய் 10,000/- ஐ கொடுக்காமல் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI